கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 31.05.2024

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் விவசாயிகள் வாழ்வாதார மேம்பாட்டிற்கான கள ஆய்வு நிகழ்ச்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்ககம் மற்றும் தமிழ்நாடு அரசின் வேளாண்மை விவசாய நலத்துறை ஆகியவை இணைந்து 30.05.2024 அன்று விரிவாக்கச் சீர்திருத்தங்களுக்கான மாநில விரிவாக்கத் திட்டம் (SSEPERS) – வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) ஆதரவின் கீழ் ஆராய்ச்சி – விரிவாக்க இடர்பாடுகளையும் ஒரு நாள் கலந்துரையாடல் நிகழ்வு நடை பெற்றது,

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பி. பொ.முருகன் வரவேற்றார். இந்த நிகழ்வின் நோக்கத்தை, கூடுதல் வேளாண் இயக்குநர் (GOI திட்டங்கள்) திரு. எஸ். சங்கரசுப்ரமணியம் விளக்கினார். அதில், ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்கலைக்கழக விஞ்ஞானிகளை உள்ளடக்கிய உழவர் களப் பரிசோதனைகள் நடத்தப்பட வேண்டும் என்றும், அதன் அடிப்படையில் குறுகிய கால ஆராய்ச்சியை முன்மொழியலாம் என்றும் வலியுறுத்தினார். இதுபோன்ற ஆராய்ச்சிகளை மேற்கொள்ள இந்திய அரசு ATMAவின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது என்றும் அவர் கூறினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் வெ. கீதாலட்சுமி, நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து, பங்கேற்பாளர்களுக்கு ஒவ்வொரு இயக்குநரகத்தின் கீழும் பல்கலைக்கழகம் உருவாக்கிய தொழில்நுட்பங்கள் மற்றும் ரகங்களை விவசாயிகளிடம் களப் பணியாளர்கள் ஊக்குவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். இவ்விழாவில், தமிழ்நாட்டின் 31 வேளாண் அறிவியல் மையங்களில் இருந்தும் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் மற்றும் 37 மாவட்டங்களைச் சேர்ந்த வேளாண்மை இணை இயக்குநர்கள் மற்றும் உதவி வேளாண் இயக்குநர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்று, மாநிலத்தில் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சிக்குரிய சிக்கல்கள் குறித்து விவாதித்தனர்.

நிகழ்ச்சியில் ஒரு பகுதியாக விவசாய கள பிரச்சினைகளுக்கு கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பல்கலைக்கழக இயக்குனர்கள் குறிப்பாக பயிர் மேலாண்மை இயக்குனர், பயிர் மேலாண்மை தொடர்பான கேள்விகளுக்கும், பயிர்கள் பற்றிய தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மையத்தின் இயக்குனர், பயிர் வகைகள் தொடர்பான கேள்விகளுக்கும், இயற்கை வள மேலாண்மை இயக்குனர், ஊட்டச்சத்துக்கள் தொடர்பான கேள்விகளுக்கும், தாவர பாதுகாப்பு ஆய்வு மையத்தின் இயக்குனர், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை தொடர்பான கேள்விகளுக்கும் மற்றும் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி ஆய்வு மைய இயக்குனர் கொள்கை விஷயங்கள், சந்தை தொடர்பான கேள்விகளுக்கும் பதில் அளித்தனர்.

இறுதியாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பயிற்சிப் பிரிவின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ந. ஆனந்தராஜா அவர்கள் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

*மக்கள் தொடர்பு அலுவலர்*